கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

திருவள்ளுவர் ஆண்டு 2054 சோபகிருது வருடம் சித்திரை மாதம் 13–ம் நாள் புதன்கிழமை

2023 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 26–ஆம் நாள், புதன்கிழமை

**I.A.No. 04 of 2022**
**in**
**O.S. No. 209 of 2015**

சஞ்சய்க்குமார் அவரது பவர் ஏஜெண்டான
V. ஜெயக்குமார் மூலம்

... மனுதார் / வாதி

/எதிர்/

1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்
அதன் செயல் அதிகாரி மூலம்

2. தமிழக அரசு அதன் மாவட்ட ஆட்சியர் மூலம்
திருநெல்வேலி.

3. தாசில்தார் இராதாபுரம்,
திருநெல்வேலி மாவட்டம்.

4. ஆணையர் இந்து அறநிலைத்துறை
சென்னை.

... எதிர்மனுதார்கள் /
பிரதிவாதிகள்

இம்மனு 13.04.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஏ. எஸ். ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:02:44 +0530

முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர்களைப் பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களைப் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய உத்தரவிட வேண்டி கட்டளை 7 விதி 14 (3) மற்றும் பிரிவு 151 –ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கு விளம்புகை மற்றும் இன்ஜங்ஷன் பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வள்ளியூர் கிராமத்தில் உள்ள சொத்து சர்வே எண். 1197 ல் வடபுறம் உள்ள 56 சென்ட் கிரையம் வாங்கப்பட்டது. இந்நிலையில் இதே சர்வே எண் சொத்தில் இதே பிரதிவாதிகளுக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்க எண். 210/2015 தாக்கல் செய்து நிலுவையில் இருந்தது. மேற்படி இரு வழக்குகளும் சேர்ந்தே நடத்த வேண்டி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு தற்போது முதல் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் I.A.No.03 of 2021 ல் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அப்போது கிடைக்கவில்லை. தற்போது தான் கிடைத்தது. எனவே, மனுவில் குறிப்பிட்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:02:54 +0530

2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்:</u>

மனு அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையல்ல. தபசில் சொத்து மாதாந்திர சுக்கிர வார வில்வ அர்ச்சனை கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். கடந்த பல ஆண்டுகளாக மேற்படி கட்டளை நடைபெறாமல் உள்ளது. கட்டளை சொத்தில் மனுதாரர் கிரையம் பெற்று அனுபவம் செய்ததாக சொல்வது உண்மையல்ல. மேலும், இவ்வழக்கு பலமுறை கட்டாய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையை காலங்கடத்த வேண்டி மனுதாரர் தொடர்ந்து மனுக்கள் தாக்கல் செய்து வருகின்றார் ஏற்கனவே, I.A.No. 03 of 2021 என்று இதே பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்தார். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு போடப்பட்ட நிலையில், மீண்டும் I.A.No. 04 of 2021 மனுவை ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள மனு தாக்கல் செய்துள்ளார். இந்த ஆவணங்கள் தற்போது தான் கிடைத்தது என்றும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் சுத்தப்பொய்யாகும். எனவே, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வள்ளியூர் கிராமத்தில் உள்ள சொத்து சர்வே எண். 1197ல் வடபுறம் உள்ள 56 சென்ட் கிரையம் வாங்கப்பட்டது. இந்நிலையில் இதே சர்வே எண் சொத்தில் இதே பிரதிவாதிகளுக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்க எண். 210/2015 தாக்கல் செய்து நிலுவையில் இருந்தது. மேற்படி இரு வழக்குகளும் சேர்ந்தே நடத்த வேண்டி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு தற்போது முதல்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:03:02 +0530

விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் I.A.No.03 of 2021 ல் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அப்போது கிடைக்கவில்லை. தற்போது தான் கிடைத்தது. எனவே, மனுவில் குறிப்பிட்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தபசில் சொத்து மாதாந்திர சுக்கிர வார வில்வ அர்ச்சனை கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். கடந்த பல ஆண்டுகளாக மேற்படி கட்டளை நடைபெறாமல் உள்ளது. கட்டளை சொத்தில் மனுதாரர் கிரையம் பெற்று அனுபவம் செய்ததாக சொல்வது உண்மையல்ல. மேலும், இவ்வழக்கு பலமுறை கட்டாய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையை காலங்கடத்த வேண்டி மனுதாரர் தொடர்ந்து மனுக்கள் தாக்கல் செய்து வருகின்றார் ஏற்கனவே, I.A.No. 03 of 2021 என்று இதே பரிகாரத்திற்காக மனு தாக்கல் செய்தார். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு போடப்பட்ட நிலையில், மீண்டும் I.A.No. 04 of 2021 மனுவை ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள மனு தாக்கல் செய்துள்ளார். இந்த ஆவணங்கள் தற்போது தான் கிடைத்தது என்றும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் சுத்தப்பொய்யாகும். எனவே, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. அசல் வழக்கானது வாதி விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.04.26 16:03:10 +0530

அளிக்க வேண்டும் என்பதாலும், மனுவானது விசாரணை தொடக்கத்திலேயே தாக்கல் செய்யப்பட்டதாலும், மனு அனுமதிப்பதனால் தான் இருதரப்பினர்களுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அறிய முடியும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஏப்ரல் மாதம் 26–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:03:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.04.26 16:03:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

-------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
வள்ளியூர்

**I.A.No. 04 of 2022**
**in**
**O.S. No. 209 of 2015**

வரைவு/ சீரான உத்தரவு

நாள் 26.04.2023

-------------------------------